RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s19

OPEN ACCESS

# தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் நோக்கும் போக்கும்

இரா. வீரபத்திரன் [அ, *]

[அ] மொழிகள் துறை, கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம், கோயம்புத்தூர்-21, தமிழ்நாடு, இந்தியா.

# Motives and Trends of Tamil Medieval Literature

**R. Veerapathiran [a, *]**

[a] Department of Languages, Karpagam Academy of Higher Education, Coimbatore-21, Tamil Nadu, India.

* Corresponding Author: veerapathiran.suresh17@gmail.com

Received: 04-11-2020
Revised: 25-05-2021
Accepted: 29-05-2021
Published: 08-06-2021

Check for updates

**ABSTRACT**

There is innumerable literature that have appeared in our Tamil language which is the most ancient language in the world. Tamil literature has reached various stages of development from the Tholkappiyar period to the twentieth century. During the Sangam period, Sangam literature, Sangam literature during the Maruviya period, epics during the Chola period and Medieval literature during the Nayakas period were well understood. Each period in which Tamil literature appeared reflected the social, political, cultural and economic backgrounds of the time. Literature also needs to change according to social background as time goes on. It is the literature that appears to bring about such change that is enduring. Conceived in the Tholkappiya Noorpa, the Sangam literature have undergone various stages of development in the devotional literature, and the epics that have evolved into separate literary genres which have multiplied beyond the tradition of ninety-six epics during the Nayakas period. Some of the best-known literature of a given period stops its developmental stage with that period. However, Medieval literatures have been revived in the twentieth century with various changes in the subject matter and structure of society.

**Keywords:** Tholkappiyar, Literature, Medieval, Ancient, Language, Nayakas, Tradition, Century, Society

## முன்னுரை

மூவாயிரம் ஆண்டுகட்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்த நம் தமிழ் மொழியில் பூத்துக் கிளைத்த இலக்கியங்கள் எண்ணிலடங்கா. இயற்கை பேரிடரால் பல தமிழ் இலக்கிய நூல்கள் மறைந்தன. எனினும் இயற்கை பேரிடரைத் தாண்டி உயிர்த்த முதல் நூல் தொல்காப்பியம். இதனைத் தொடர்ந்து சங்க காலம் தொடங்கி தற்காலம் வரை தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் புதிய வடிவில் முகிழ்த்தன. தமிழ் இலக்கிய அரும்புகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் கொத்துக் கொத்தாய்ப் பூத்து மணம் பரப்பின. தமிழ் இலக்கியச் சோலையில் சிற்றிலக்கியங்கள் மழைக்குப் பின் வெளிப்படும் புற்றீசல் போல பரந்து விரிந்தன. தமிழ் இலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்கள் அரும்பி, பூத்து, கிளைத்த நோக்கமும் அதன் போக்கு நிலையையும் பற்றி எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் பல்வேறு வளர்ச்சி நிலைகளைப் பெற்று வந்துள்ளன. அவ்வளர்ச்சி நிலைகள் அந்தந்தக் காலத்திற்குரிய சமூகம், அரசியல், பொருளாதாரப் பின்புலங்களை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன. கடல்கோளுக்குப் பின் நமக்குக் கிடைத்த முதல் நூலாகக்

கருதப்படும் தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலே. தொல்காப்பியத்தின் மூலம் பழந்தமிழில் எண்ணற்ற இலக்கியங்கள் இருந்துள்ளதை நம்மால் அறியமுடிகின்றது. கடைச்சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்களான பாட்டும் தொகையும் தொல்காப்பியத்திற்கு இலக்கியங்களாகத் திகழ்கின்றன. எட்டுத்தொகையில் புறப்பொருள் நூலான புறநானூற்றில் பல பாடல்கள் தொல்காப்பிய காலத்திற்கு முற்பட்டதாக விளங்குகிறது (Jayaraman, 1980; Silabmu N Selvarasu, 1984; Ponnusamy, 2004).

## தொல்காப்பியரின் தொலைநோக்குப் பார்வை

தொல்காப்பியர் தாம் படைத்த தொல்காப்பியத்தில் தமது காலத்தில் வழக்கிலிருந்த இலக்கியங்களுக்கும் பிற்காலத்தில் எழுகின்ற இலக்கியங்களுக்கும் இலக்கணத்தை வரையறுத்துள்ளார். தொல்காப்பியம் குறிப்பிடும் எண்வகை வனப்பினுள் `விருந்து' என்ற வனப்பானது பிற்காலத்தில் புதியனவாய்ப் படைக்கப்பெறும் இலக்கியங்களைச் சுட்டுகின்றது.

"விருந்தே தானும்

புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (தொல்காப்பியம், செய்யுளியல் நூற்பா 232)

இந்நூற்பாவிற்குப் பேராசிரியர், "புதுவது கிளந்த யாப்பின் மேற்று" என்றதென்னையெனின், புதிதாகத் தாம் வேண்டிவற்றாற் பல செய்யுளுஞ் தொடர்ந்து வரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க. கலம்பகம் முதலாயினவும் சொல்லுப" என உரை வரைந்துள்ளார் (Tolkappiar, 1966). இக்கருத்தினையே உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரும் வலியுறுத்தியுள்ளார்.

தண்டியலங்கார ஆசிரியர் தொடர்நிலைச் செய்யுளை, பொருளினும் சொல்லினும் இருவகை தொடர்நிலை என இருவகையாகப் பிரித்துரைக்கிறார். பொருட்டொடர் நிலைச் செய்யுளைப் பெருங்காப்பியம், காப்பியம் என இரண்டாகப் பகுத்துரைக்கிறார்.

"அறமுத னான்கினும் குறைபாடுடையது

காப்பிய மென்று கருதப்படுமே" (தண்டியலங்காரம், நூற்பா - 6)

எனக் காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார். "காப்பியமெனினும் சிறுகாப்பிமெனினும் ஒக்கும். அது மேற்கூறியபடி பல வருணனைகளைப் பெறாது வருவது உலா, மடல், பிள்ளைத்தமிழ், பரணி, ஆற்றுப்படை முதலியன"[4] என உரையாசிரியர் உரை எழுதியுள்ளார் (Subramaniyan, 1984).

மேற்குறித்த நூற்பாக்களும் நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் வரைந்துள்ள விளக்கங்களும் நோக்கும் போது அறம் பொருள் இன்பம் வீடு முதலிய நான்கு உறுதிப்பொருள்களையும் பாடுவது காப்பியம் என்றும், வருணனையைப் பெறாது வருகின்ற பிள்ளைத்தமிழ் முதலியன சிறுகாப்பியம் என்றும் தெளிவாகின்றன. காப்பியத்தைப் பேரிலக்கியம் என்றும் சிறுகாப்பியத்தைச் சிற்றிலக்கியம் என்றும் கொள்வதே இலக்கியங்களை வகைப்படுத்தி அறிவதற்கு எளிதாக இருக்கும். காப்பியத்தைப் பேரிலக்கியம் என்றும் சிறுகாப்பியத்தைச் சிற்றிலக்கியம் என்றும் கொள்வதே இலக்கியங்களை வகைப்படுத்தி அறிவதற்கு எளிதாக இருக்கும்.

## சிற்றிலக்கியத் தோற்றப் பின்புலம்

சங்க இலக்கியங்கள் அக்கால கட்டத்தில் வாழ்ந்த மன்னர்களின் அரசியல், பொருளாதாரம், மக்களின் வாழ்க்கை முறைகள், புலவர்களின் கவித்திறமை ஆகியவற்றை எடுத்தியம்புகின்றன. சங்க காலம் பிறமொழிகளின் கலப்பும் சார்பும் இல்லாதிருந்தது. மக்களின் வாழ்க்கை முறையிலும் அமைதி நிலவி சிறந்திருந்தது. புலவர்கள் செல்வச் செழிப்புடன் உலா வந்தனர். அகமும் புறமும் தழுவிய காதற்பாடல்களும், வீரப்பாடல்களும் தன்னுணர்ச்சிப் பாக்களாக சிறப்புற்று விளங்கின. பொன்னுக்கோ சோற்றுக்கோ பாடாத காலமாக சங்க காலம் விளங்கியது.

சங்க காலத்திற்குப் பின் களப்பிரர்கள் வருகையாலும், பல்வேறு நாட்டவர்களின் வருகையாலும் தமிழ்ச் சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட்டது. மக்களின் வாழ்க்கை முறையில் தனிமனித ஒழுக்கமும், மனிதநேயப் பண்பும் மறைந்து பொய், களவு, சூது போன்ற ஒழுக்கக்கேடுகள் தலைதூக்கின. அரசர்களும் குறுநில மன்னர்களும் நாட்டைக் காக்கும் பொருட்டு தொடர்ச்சியாகப் போரில் ஈடுபட்டு வந்தனர். நாட்டைக் காக்கும் முனைப்பில் இருந்த இவர்களுக்கு மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்த நேரமில்லாமல் போயின. நாடு முழுவதும் குழப்பங்கள் நிறைந்து காணப்பட்டன. புலவர்களின் வறுமை நிலை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. புலவர்கள் தங்களின் வறுமையைப் போக்கிக் கொள்ளப் புரவலர்களை நாடிப் பிழைக்க வேண்டிய சூழ்நிலை நிலவியது. தாம் கற்ற கல்வியால் மக்களின் அகவாழ்வையும், புறவாழ்வையும் உண்மைத் தன்மையோடு தன்னுணர்ச்சிகளை வெளிப்படுத்தியவர்கள் இன்று, தம் வறுமையை அகற்றுவதற்காகப் பாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். போரில் களைப்புற்று அந்தப்புறமே கதியென்று சிற்றின்ப வேட்கையில் மூழ்கி இருந்த மன்னர்களுக்கும், குறுநிலமன்னர்களுக்கும் மொழிச்சிறப்பும், அரச நீதியும், மக்கள் துன்பமும் செவிக்கு எட்டாது என்று கருதியே சிருங்காரச்சுவையோடு பெண்களின் உறுப்புகளை வருணித்துப் பாடினர். கேசாதிபாதம், பாதாதிகேசம், கோவை போன்ற இலக்கியங்கள் காதல் சுவை சொட்டச்சொட்டப் பாடப்பட்டன. இத்தகைய சூழலில் இலக்கியங்களில் சமூகத் தன்மை, பொருளாதாரம் முதலியன வெளிப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றே கூறலாம். தொல்காப்பியத்தில் அகம் மற்றும் புறத்திணைத் துறைகளில் இருந்த வித்தானது சங்க இலக்கியத்தில் கருக்கொண்டு பக்தி இலக்கியத்தில் அரும்பி நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்களாகச் செழிப்புற்றன.

சிற்றிலக்கியங்கள் பெரும்பாலும் தெய்வங்கள், அடியார்கள், பெருமன்னர், குறுநிலமன்னர், பெருநிலக்கிழார், அறிஞர்கள், கவிஞர்கள் ஆகியோரைக் குறித்தும் சிலவற்றில் மக்களின் சமூகப் பழக்கவழக்கங்கள் குறித்தும் பாடப்பட்டுள்ளன.

## பிள்ளைத்தமிழ் இலக்கியம்

புலவர் தாம் விரும்பும் ஒருவரை குழந்தையாக பாவித்து பத்துப் பருவங்கள் அமைத்து ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பாடல்களாகப் பாடப்படுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். பெரியாழ்வார் திருமாலைக் குழந்தையாகக் கண்டு பாடிய பாடல்களே பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு முன்னோடியாக அமைந்தன. ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்கன் சோழன் பிள்ளைத்தமிழ் நூலே முதல் பிள்ளைத்தமிழ் இலக்கியமாகத் திகழ்கின்றது. பிள்ளைத்தமிழில் சிறந்தவையாகப் போற்றப்படுவது குமரகுருபரர் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ் போன்றவையாகும்.

பிள்ளைத்தமிழ், ஆண்பால் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலிப்பருவம் என்பன இருபாலருக்கும் பொதுவானதாகும். சிற்றில், சிறுபறை, சிறுதேர் பருவம் முதலியன ஆண்பாலுக்கும், கழங்கு, அம்மானை, ஊசல் பருவம் முதலியன பெண்பாலுக்கும் உரியன என்பது பிள்ளைத்தமிழ் இலக்கிய மரபாகும்.

பண்டிதமணி பிள்ளைத்தமிழில் திருநீற்றுப்பருவம், திருவாசகப்பருவம், சன்மார்க்க சபைப் பருவம் மற்றும் பெரியார் பிள்ளைத்தமிழில் கூர்ந்துணர்பருவம், வினாவுறுபருவம் கதைகேள்பருவம் போன்ற பருவங்கள் கூடுதலாக அமைந்துள்ளன. ஒவ்வொரு பருத்திற்கும் பத்துப் பாடல்கள் பாடவேண்டும் என்ற மரபை மீறி சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழ், பழனிப்பிள்ளைத்தமிழ், திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ் முறையே பருவத்திற்கு 7, 3, 1 என பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

## உலா இலக்கியம்

இறைவனையோ மானிடருள் உயர்ந்தோரையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவர் உலா வரும்போது ஏழு பருவப் பெண்களும் காதல் கொள்ளும் பொருளில் பாடப்படும் இலக்கியம்

உலாவாகும். பெருங்காப்பியங்களில் பாட்டுடைத்தலைவன் நகர்வலம் வருவது பற்றி சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கும் இச்செய்தி பின்னாளில் தனி ஒரு இலக்கியமாக உருவெடுத்தது. இதில் பாட்டுடைத் தலைவனது குலம், குடிபிறப்பு, மரபு, அழகு, அறிவு, ஆண்மை, அன்பு ஆகியவை முதற்பகுதியிலும், அவனைக் கண்ட பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனும் ஏழுபருவ பெண்களின் காதல் பற்றிய செய்திகள் பிற்பகுதியிலும் கூறப்பட்டிருக்கும். சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கைலாயஞான உலாவே முதல் உலா இலக்கியமாகும். பாட்டுடைத் தலைவன்மீது பெண்கள் காதல் கொள்ளும் செய்திகளை மிகுதியாகப் பாடப்பட்ட இவ்விலக்கியம் காலப்போக்கில் மாறி சமுதாயச் சூழலுக்கு ஏற்ப உலா இலக்கிய மரபை மீறி பாடப்பட்டன.

காமராசர் உலா பாட்டுடைத்தலைவனை வாழ்த்திக்கூறுவதாகவும், பெரியார் உலா திராவிட இயக்கச் சிந்தனைகளை மொழிவதாகவும், தமிழ்ச்செல்வி உலா இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு தமிழ்த்தாய் போராட்டக்களத்திற்கு எழும் உலாவாக பெண்களின் காமப் பகுதிகள் இல்லாமல் இயற்றப்பட்டுள்ளன.

## பரணி இலக்கியம்

ஆயிரம் யானைகளைப் போர்க்களத்தில் வென்று வீரச்செயல் புரிந்த வீரனைச் சிறப்பித்துப் பாடும் இலக்கியம் பரணியாகும். பரணி இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டது சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியாகும். கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராசபாரம்பரியம், பேய்முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளிகூறியது, களம் காட்டியது, கூழ் அடுதல் என்னும் பதின்மூன்று உறுப்புகளைக் கொண்டு பாடப்பட்டுள்ளது. அரசர்கள் புறப்பகையான பகைவர்களைப் போர்க்களத்தில் வெற்றி பெற்ற போர்க்களச் செய்திகளை விரித்துப் பாடப்பட்ட இச்சிற்றிலக்கியம் அகப்பகையாய் அமையும் காமம், குரோதம் முதலியவற்றை வென்று சிறப்பிப்பதாக வைத்தியநாத தேசிகரின் பாசவதைப்பரணி அமைகின்றது. புரட்சித்தலைவி போர்ப்பரணி தேர்தல் செய்திகளை அடிப்படையாகக் கொண்டது.

## ஆற்றுப்படை இலக்கியம்

பாணர், பொருநர், விறலி, புலவர் ஆகிய இவர்களில் வள்ளலிடம் பரிசு பெற்றுத் திரும்பும் ஒருவன் அவ்வள்ளலின் புகழைக்கூறி அவனையும் சென்று பரிசில் பெற்று வருமாறு ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படை இலக்கியமாகும். சங்க இலக்கியத்தில் காணலாகும் ஆற்றுப்படை நூல்கள் பாட்டுடைத் தலைவனின் வளங்களும், கொடைச்சிறப்பும், புலவர்களின் வறுமைநிலையும், ஆற்றுப்படுத்துதலும் நோக்கமாகக் கொண்டமைந்தன. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய அச்சக ஆற்றுப்படை இளைஞன் ஒருவனை அச்சகத்திற்கு ஆற்றுப்படுத்துவதாகவும், மாணாக்கர் ஆற்றுப்படை மாணவர்களைப் பள்ளிக்குச் செல்ல ஆற்றுப்படுத்துவதாகவும், இயற்கை ஆற்றுப்படை நகரத்தானை சிற்றூரான் ஒருவன் இயற்கை எழில் கூறி அதன்பால் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளன.

## குறவஞ்சி இலக்கியம்

பாட்டுடைத் தலைவனை உலாவரக் கண்டு காதல் கொண்டு காம வேதனையால் வாடித்தவிக்கும் தலைவி ஒருத்திக்குக் குறவர் குலத்தைச் சார்ந்த பெண்ணொருத்தி குறி கூறிப் பரிசில் பெறும் பொருளமைதிகள் கொண்டது குறவஞ்சி இலக்கியமாகும். திரிகூடராசப்பக்கவிராயர் இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சி முதல் குறவஞ்சி இலக்கியமாகும். சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, விராலிமலைக் குறவஞ்சி முதலியன சிறப்புவாய்ந்தன. தற்காலத்தில் எழுந்த கூட்டுறவுக் குறவஞ்சி நாட்டு மக்களின் பொருதார முன்னேற்றம், தொழில் வாணிகம் மற்றும் பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்கும் கூட்டுறவுத்துறையின் தத்துவத்தை விளக்குவதாக அமைவு பெற்றுள்ளது.

## தூது இலக்கியம்

ஒருவர் கருத்தை மற்றொருவர்க்குத் தெரிவிக்கத் தகுந்த ஒருவரை அனுப்புவது தூது இலக்கியம். அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, குயில், தோழி, நெஞ்சு, தென்றல், வண்டு முதலான பத்து பொருள்களில் ஏதேனும் ஒன்றினைத் தலைவனிடம் தூது சென்று வருமாறு பாடப்படுவதாகும். தூதுவிடும் பழக்கம் பண்டைத் தமிழரிடம் பெருகியிருந்தது. சங்க இலக்கியத்தில் ஔவையார் அதியமானுக்காக தொண்டைமானிடம் தூது சென்றதும், பக்தி இலக்கியத்தில் சிவபெருமான் சுந்தரருக்காக பரவைநாச்சியாரிடம் தூது சென்றதும், கம்பராமாயணத்தில் அனுமன், அங்கதன் தூதுப்படலம் போன்றவை தூது இலக்கியத்தின் அடிப்படையாக அமைகின்றன. உமாபதி சிவாசாரியாரின் நெஞ்சுவிடுதூது முதல் தூது இலக்கியமாகும். தமிழ்விடுதூது, அழகர்கிள்ளைவிடுதூது முதலியன தூது இலக்கியங்களில் சிறப்பாகப் போற்றப்படுகிறது. பிற்காலத்தில் தூது விடுக்கும் பொருள்கள் மற்றும் பாடுபொருளிலும் மாற்றம் ஏற்பட்டது. புகையிலை விடுதூது, செருப்புவிடுதூது, காக்கைவிடுதூது போன்ற தூது நூல்கள் தற்காலச்சூழலுக்கு ஏற்ப மாற்றம் பெற்றுள்ளது.

## முடிவுரை

இலக்கியங்கள் காலந்தோறும் தன்னைப் புதுப்பிக்குக்கொண்டு வாழ விழைகிறது. தன்னைப் புதுப்பித்துக் கொள்ளாத இலக்கியங்கள் வீழ்ச்சியடைகிறது. சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்னும் மரபு இருந்தபோதிலும் அதற்கு மேற்பட்ட சிற்றிலக்கிய வகைகள் தோன்றி வளர்ந்துள்ளன. பல சிற்றிலக்கியங்கள் பெயரளவில் மட்டுமே காணப்படுகின்றன. குறிப்பிட்ட சில வகை இலக்கியங்கள் இன்றளவும் வளர்ந்து வருகின்றன. ஒரே வகையான இலக்கியத்தில் பல நூல்கள் எழுந்துள்ளன. இதற்குக் காரணம் அவ்வகை இலக்கியங்கள் மக்களிடம் செல்வாக்கு பெற்று இருந்ததும், புலவர்களின் போட்டி மனப்பான்மையுமே ஆகும். எவ்வாறாயினும் இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் மக்களிடம் பெறுகின்ற வரவேற்பானது சமூகச் சூழலை ஒட்டியே அமைகின்றது. நாளடைவில் சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படும்போது இலக்கியத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டால் மட்டுமே மக்கள் அதை விரும்புவர், மக்கள் விரும்புகின்ற அளவிற்கு இலக்கியங்களும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கும். அவ்வாறன்றி பழமையை மட்டுமே பறைசாற்றிக் கொண்டிருக்கும் இலக்கியங்கள் அனைத்தும் வீழ்ந்துவிடுகின்றன என்று சொல்ல முடியாது. சில இலக்கிய வகைகள் சிறிது காலம் வாழ்விழந்து பின்னர் தனக்கு வாய்ப்பான சூழல் ஏற்படும் காலத்தில் புத்துணர்ச்சியோடு மறுமலர்ச்சி அடையும். சங்க இலக்கியம், சங்கம் மருவியகால இலக்கியம், காப்பியம் முதலியன அவ்வக்காலத்தில் சிறப்புற்று விளங்கின. சிற்றிலக்கியங்கள் நாயக்கர் காலத்தில் சிறந்து விளங்கி இருபதாம் நூற்றாண்டிலும் மறுமலர்ச்சி பெற்று வாழ்ந்து கொண்டு இருக்கின்றன.

### References

Jayaraman, N.V., (1980) Short Literature Review, Ilakiya Pathipagam, Chennai, India.

Ponnusamy, M., (2004), History of Tamil Short Literature, Indhu Press, Coimbatore, India

Silabmu N Selvarasu (1984), 20th century Short literature, Manivasagar Pathipagam, Chidambaram, India

Subramaniyan, S.V., (1984) Tamil Literary Genre and Form, Tamil Pathipagam, Chennai, India

Tolkappiar, (1966) Tholkappiyam, Porulathigaram, Saiva Siddhantha Works Publishing Society Tinnevely Ltd., Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License